Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, AUGUST 4, 2021

புதன்கிழமை ஒகஸ்ட் 04, 2021 | ஒளி: 07 கதிர்: 65 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | free

யாழ். போதனாவில் ஒட்சிசன் தட்டுப்பாடு

■ என்.ராஜ்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒட்சிசன் தட்டுப்பாடு நிலவுகிறது என வைத்தியசாலையின் பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராஜா, அங்கு நேற்று (03) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது தெரிவித்தார்.

‘என் சாவுக்குக் காரணம்’

‘தங்கைக்கு ஆங்கிலம் தெரியாது’

ஆங்கில எழுத்துகளை வசனமாக்கி எழுதும் வகையில் தங்கைக்கு அறிவு இருக்கவில்லை

எனக்குத் தெரிந்த வரையில் என்னுடைய தங்கையான ஹிஷாலினிக்கு, ஆங்கிலம் எழுதுவதற்கான திறமை இல்லை என, மரணமடைந்த டயகமவைச் சேர்ந்த 16 வயதான சிறுமியின் சகோதரன் தெரிவித்துள்ளார். தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் மரணமடைந்த ஹிஷாலினி ஜூட், அவிசாவளை, புவக்பிட்டிய தமிழ் வித்தியாலயத்தில் 7ஆம் வகுப்பு வரையில் மட்டுமே கல்வி பயின்றுள்ளார். தொடர்ச்சி P2

மூடி மறைக்க எழுதப்பட்டதா?



ஹிஷாலினி பாடசாலையில் பயன்படுத்திய அப்பியாசக் கொப்பிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு உள்ளன

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் கொழும்பு இல்லத்தில் டயகம பகுதியைச் சேர்ந்த 16 வயதான சிறுமி ஹிஷாலினி, தீக்காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்தமை தொடர்பான விசாரணைகள் பல கோணங்களிலும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில், சிறுமி ஹிஷாலினி தங்கியிருந்த அறையின் சுவரொன்றில் தமிழில் அர்த்தப்படும் வகையில் எழுதப்பட்ட ஆங்கில மொழி எழுத்துகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, நேற்று (03) தெரிவித்தார். தொடர்ச்சி P2

ஹிஷாலினியின் மரணத்தில் இருதரப்பும் இரட்டைவேடம்

சிறுமி ஹிஷாலினி மரண விவகாரத்தில் எதிர்க்கட்சியினரும், மலையக அரசியல்வாதிகளும் இரட்டைவேடம் போடுகிறார்கள் எனத் தெரிவித்த, ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா, ரிஷாட் பதியுதீன் எம்.பியை ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து இடை நிறுத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் வினவினார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று (3) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இச்சிறுமியின் மரணத்தைத் தொடர்ந்து பல விடயங்கள் தற்போது வெளியாகியுள்ளன. பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் தரப்பினருக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் தொடர்பு உள்ளதாக எதிர்த்தரப்பினர் குறிப்பிடும் நிலையில், தொடர்ச்சி P2

கைக்குழந்தை உட்பட மூவர் விபத்தில் பலி

மீகொடை, வட்டரக்க ரயில் நிலையத்துக்கு அருகே லொறியும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் நான்கு மாத கைக்குழந்தை உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குழந்தையின் பாட்டி, ஓட்டோவின் சாரதி ஆகியோரே உயிழந்துள்ளனர் எனத் தெரிவித்த பொலிஸார், குழந்தையின் தாய் காயமடைந்து, களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவித்தனர். தொடர்ச்சி P2

நுழைய முற்பட்டபோது பதற்றம்; பொலிஸ் பொறுப்பதிகாரி காயம்

பத்தரமுல்ல, ஜயந்திபுரவில் உள்ள பாராளுமன்ற நுழைவு வீதிக்குள் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரின் ஆர்ப்பாட்டப் பேரணி நுழைய முற்பட்டபோது ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையால், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஒருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த மஹரகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியான எச். எச். ஜனகாந்த, ஸ்ரீ ஜெயவர்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்துக்கு எதிராக, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நடத்திவரும் ஆர்ப்பாட்டப் பேரணி, பாராளுமன்ற வளாகத்துக்குள் நுழைய முயன்றது. பேரணியாக வந்தவர்களை பொலிஸார் தடுத்தனர். இதனால் இருதரப்பினருக்கும் இடையில் கடும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

ஆசிரியர்களை வைத்து சிலர் பயனடையப் பார்க்கின்றனர்

■ மகேஸ்வரி விஜயனந்தன்

கொள்கையை மதிக்கும் அரசாங்கம் என்ற ரீதியில், இந்த வருட நிறைவில் வரவு -செலவுத்திட்டத்தில் ஆசிரியர்கள் மற்றும் ஏனைய அரச பணியாளர்களின் சம்பளம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல, “தற்போது தோன்றியுள்ள பிரச்சினையை அடிப்படையாக வைத்து, சூட்சுமமாக அரசியல் ரீதியில் பயனடைய சிலர் முயற்சிக்கின்றனர்” என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (3) நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, தொடர்ச்சி P2

புல்லுவெட்டி வாளாக சிக்கியது

■ எம்.றொசாந்த்

புல்லு வெட்டுவதற்காக பயன்படுத்தப்படும் புல்லுவெட்டியை வாளாக உருமாற்றம் செய்து, அதனை மறைத்து எடுத்து சென்ற இளைஞன் ஒருவர், காங்கேசன்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். தொடர்ச்சி P2

பொருள்களின் விலைகள் கிடுகிடுவென எகிறுகின்றன

■ வி.ரி.சகாதேவராஜா

அன்றாடம் பயன்படுத்தப்படும் பொருள்களின் விலை நாளுக்குநாள், 10 அல்லது 20 ரூபாய்களால் அதிகரிக்கப்படுகின்றன. வர்த்தகர்கள் அதிகரிப்பதை விடவும் அந்தந்த நிறுவனங்களே, எவ்விதமான கட்டுப்பாடுகளும் இன்றி, விலைகளை தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றன என நுகர்வோர் குற்றஞ்சாட்டினர்.

ஒரு பொருளின் விலை ஓரிரு மாதங்களுக்குள் இரண்டு அல்லது மூன்று தடவைகள் அல்லது அதற்கு மேல், இவ்விரண்டு மடங்குகளால் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும் நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சியாக விலைகளை அதிகரிப்பது, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மென்மேலும் நெருக்கடிக்குள் தள்ளிவிடுகின்றது என்றும் நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர். தொடர்ச்சி P2

ஐ.தே.க ஊடகப்பிரிவின்

பொறுப்பாளர் ஆனந்தகுமார்

ஐக்கிய தேசிய கட்சியின் ஊடகப் பிரிவின் பொறுப்பாளராக, அக்கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளரான எஸ். ஆனந்தகுமார் நியமிக்கப்பட்டுள்ளார். தொடர்ச்சி P2

முன்வைத்த கால்களை பின்வைத்தது அரசாங்கம்

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டமூலத்தை, வெள்ளிக்கிழமை (06) பாராளுமன்றத்தில் விவாதிப்பதற்கு ஏற்கெனவே தீர்மானித்திருந்த அரசாங்கம், அன்றையதினம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளாமல் விடுவதற்கு முடிவு செய்துள்ளது.

இந்நிலையில், அந்தச் சட்டமூலத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் தொடர்பில், ஆராய்வதற்காக பாராளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிப்பதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற ஆளும் கட்சியின் கூட்டத்தில், இது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டே இத்தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலத்துக்கு எதிராக நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படும் அதேவேளை, தொடர்ச்சி P2

எங்களுடன் உரையாட

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை

■ க. அகரன்

அரசியல் தீர்வு மற்றும் இலங்கையின் மனித உரிமைகள் சார்ந்த விடயங்கள் தொடர்பில் தங்களுடன் உரையாடுவதற்கு, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என, தொடர்ச்சி P2

பெண் எம்.பிக்களுக்கு சபைக்குள் மொழியால் பாலியல் துன்புறுத்தல்

■ பா. நிரோஸ்

பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெண் எம்.பிக்களுக்கு வாய்மொழி மூலமாக, சபைக்குள் வைத்தே விடுக்கப்படுகின்ற பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பில் சபாநாயகரின் கவனத்துக்குக் கொ ண்டுவரப்பட்டது.

இதுதொடர்பில் சபையில் நேற்று (03) உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன, இவ்வாறான துன்புறுத்தல்களைக் கேட்டு வெட்கப்படுவதாக தெரிவித்த அவர், வேடிக்கை பார்த்ததாக சபாநாயகரையும் வெளுத்துக் கட்டினார்.

முன்னாதாக எழுந்த அவர், இந்தப் பாராளுமன்றத்தில் நான் உட்பட 12 பெண் உறுப்பினர்கள் மட்டுமே இருக்கின்றோம். எனினும், வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தின் போது, தொடர்ச்சி P2

கருங்கலில் தடுப்புச் சுவர் முழுச் செய்தி P4

மலையக மக்களையும் முஸ்லிம் மக்களை மோத விடும் சூழ்ச்சி முழுச் செய்தி P7

PAGE 1 தொடர்ச்சிகள்

‘தங்கைக்கு ஆங்கிலம் தெரியாது’

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனின் கொழும்பிலுள்ள வீட்டில் வேலைக்கு அமர்த்தப்பட்டபோது, எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் மரணமடைந்த 16 வயதான சிறுமியின் மரணம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்நிலையில், அவர் தங்கவைக்கப்பட்ட அறையில், ஆங்கிலத்தில், ‘En savuku karanam’ (என் சாவுக்கு காரணம்) என எழுதப்பட்டுள்ளது. இது தொடர்பில் கேட்டபோதே, ஹிஷாலினியின் சகோதரன் திருபிரசாத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எனக்குத் தெரிந்தவகையில், ஏதாவது ஒன்றை பார்த்துக்கொண்டு எழுதும் திறமை எனது தங்கையிடம் இருக்கிறது. ஆனால், ஆங்கில எழுத்துகளை ஒன்றோடு ஒன்று கோர்த்து வசனமாக்கி எழுதும் வகையில் எனது தங்கைக்கு ஆங்கில அறிவு இருக்கவில்லை என்றும் திருபிரசாத் தெரிவித்தார்.

மூடி மறைக்க எழுதப்பட்டதா?



பேனையைப் பயன்படுத்தி, ‘En savuku karanam’ என ஆங்கில எழுத்துகளில் எழுதப்பட்டிருந்த அந்தச் சொற்களின் அர்த்தம் ‘என் சாவுக்குக் காரணம்’ என்பதாகும் என, அவர் கூறினார்.

இந்த எழுத்துகள் இரசாயன பகுப்பாய்வு நிபுணர்களால் பரிசோதிக்கப்படுவதற்காக ஹிஷாலினி பாடசாலை காலத்தில் பயன்படுத்திய அப்பியாசக் கொப்பிகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், விசாரணைகளைத் திசைதிருப்புவதற்கு வேண்டுமென்றே இவ்வாறு எழுதப்பட்டதா? அல்லது உயிரிழந்த சிறுமியால் எழுதப்பட்டதா? என்பது தொடர்பிலான விசாரணைகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

ஹிஷாலினியின் மரணத்தில் இருதரப்பும் இரட்டைவேடம்

அவ்வாறான எவ்விதத் தொடர்பும் கிடையாது என்பதைப் பொறுப்புடன் தெரிவித்துக் கொள்ள வேண்டும் என்றார்.

பொறுப்பான எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்தியினர் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனை கட்சியில் இருந்து தற்காலிகமாகவேனும் நிறுத்த வேண்டும் எனத் தெரிவித்த அவர், இவ்விடயத்தில் எதிர்க்கட்சியினரும், எதிர்த்தரப்பில் உள்ள மலையக அரசியல்வாதிகளும் இரட்டை வேடம் போடுகிறார்கள் என்றார்.

கைக்குழந்தை உட்பட மூவர் விபத்தில் பலி

பனகொடவில் உள்ள தடுப்பூசி மையத்துக்குச் செல்லும் போது இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்த பொலிஸார், லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். 40 வயதான அச்சாரதியை, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

புல்லுவெட்டி வாளாக சிக்கியது

குறித்த இளைஞன், புல்லுவெட்டியின் கைப்பிடியை மாற்றம் செய்து, புல்லுவெட்டியின் இரு பக்கங்களையும் கூர்மையாக்கி, அதனை வாளாக உருமாற்றம் செய்துள்ளார்.

அந்த இளைஞனிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஐ.தே.க ஊடகப்பிரிவின்

பொறுப்பாளர் ஆனந்தகுமார்

ஒகஸ்ட் முதலாம் திகதியில் இருந்து அமலாகும் வகையில், இவருக்கான நியமனக் கடிதம், கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் வைத்து, கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தனவால், நேற்று (03) வழங்கப்பட்டது.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை

வவுனியா மாவட்டத்தில் இருந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டத்தில் இருந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் மேற்கொள்ளப்படும் போராட்டப் பந்தலில், நேற்று (03) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்துரைத்த அவர்கள், தாங்கள் எந்தவோர் இலங்கை நிறுவனங்களையும் நம்பவில்லை எனவும் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிசால் பேச்லெட் அவர்களை மத்தியஸ்தராக்க விரும்புகிறோம் எனவும் கூறினர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தங்கள் சலுகையை ஏற்க ஒப்புக்கொண்டால், அவர்களின் கோரிக்கையை தாங்கள் பரிசீலிக்கலாமெனத் தெரிவித்த அவர், இலங்கையின் மனித உரிமைகள் ஆணையகத்தின் முன்னாள் ஆணையாளர் திருமதி அம்பிகா சற்குணநாதன், யு.என்.எச்.ஆர்.சியும் மற்றும் தமிழ் புலம்பெயர் தமிழர்கள் பலரை இலங்கை போர்க் குற்றங்களுக்காக இலங்கை விசாரணை நடத்த ஒப்புக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டனர்.

ஜெனீவாவில் மேலும் திருமதி நிமால்கா பெர்ணான்டோ, அம்பிகா சற்குணநாதன் இருவரும் இணைந்து போர்க் குற்றங்களுக்கான உள்ளூர் விசாரணையை ஊக்குவித்தனர் என்றனர்.

இலங்கையில் உள்ள எந்தவோர் அமைப்பையும் தாங்கள் நம்பவில்லை எனத் தெரிவித்த அவர்கள், ஏனென்றால் இந்தப் பரிந்துரைகள் அனைத்தும் அரசியல் மற்றும் அவர்களின் செயற்பாடுகள் இலங்கை போர்க் குற்றவாளிகளைக் காப்பாற்றுவதாகும் எனவும் கூறினர்.

> **மே 2009இல் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டபோது மனித உரிமைகள் ஆணைக்குழு எங்கே இருந்தது? எங்கள் விருப்பமான அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா, ஐ.நா கருத்தில் கொள்ளலாம்**

மே 2009இல் 146,000 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டபோது இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு எங்கே இருந்தது?

அரசியல் தீர்வு மற்றும் மனித உரிமைகள் சார்ந்த விடயங்களுக்கு, எங்களுக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை. எங்கள் முதல் விருப்பமான அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா, ஒருவேளை ஐ.நாவையும் கருத்தில் கொள்ளலாம்” என்றனர்.

ஆசிரியர்களை வைத்து சிலர் பயனடைய பார்க்கின்றனர்

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

“ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு குறித்து, கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு விளையாட்டுக்கு குறிப்பிடப்படவில்லை. ஆனால், நாட்டில் முழுமையாக அனைத்து வருமான மார்க்கங்களும் செயலிழந்துள்ள நிலையில், ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது முடியாத காரியமாகவுள்ளது” என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் ரமேஸ் பத்திரண, “அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற நிதியமைச்சரும் ஜனாதிபதியும் நடவடிக்கைகளை எடுத்துவருகின்றனர்.

“நாடு தற்போது பொருளாதார ரீதியில் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதை உணர்ந்து, மாணவர்களின் எதிர்காலத்துக்காக கற்பித்தல் செயற்பாடுகளை ஆசிரிய தொழிற்சங்க உறுப்பினர்கள் ஆரம்பிப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம்” என்றார்.

முன்வைத்த கால்களை பின்வைத்தது அரசாங்கம்

சட்டமூலத்தை வாபஸ் பெற்றுக்கொள்ளுமாறு பரவலாக அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

பெண் எம்.பிக்களுக்கு சபைக்குள் மொழியால் பாலியல் துன்புறுத்தல்

வாய்மொழி மூலமாக பெண் எம்.பிக்கள், பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

“பெண்கள், உறுப்பினர்களின் மனைவி மற்றும் முறையற்ற உறவுகள் தொடர்பில் சபைக்குள் பேசவேண்டிய எந்தவோர் அவசியமும் இல்லை. அவையெல்லாம் மக்களின் பிரச்சினைகளும் இல்லை” என்றார்.

ஆனால், அவ்வாறு பேசப்பட்டபோது, அதனையெல்லாம் நீங்கள் கேட்டுக்கொண்டு சிரித்துக் கொண்டிருந்தீர்கள் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவைப் பார்த்துக் குற்றஞ்சாட்டினார். அதற்காக தனது கண்டனத்தையும் தெரிவித்தார்.

எமது அணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரலவே இவ்வாறு வாய்மொழி மூலமான பாலியல் துன்புறுத்தலுக்கு அன்றையதினம் உட்படுத்தப்பட்டார் என்றும் ரோஹினி கவிரத்ன எம்.பி தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், இது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கின்றேன் என்றார்.

> **அவ்வாறு பேசப்பட்டபோது, நீங்கள் கேட்டுக்கொண்டு சிரித்துக் கொண்டிருந்தீர்கள்**

பொருள்களின் விலைகள் கிடுகிடுவென எகிறுகின்றன

2021ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலையானது, தற்போது பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி, இவ்வருட அரையாண்டு காலப்பகுதிக்குள் இரண்டு மற்றும் மூன்று தடவைகள் விலையேற்றம் செய்யப்பட்டுள்ளன.

குழந்தைகளின் உணவுப் பொருள்கள், பெண்களுக்கான பொருள்கள், மருத்துவப் பொருள்கள் உட்பட அன்றாடம் தேவையான பொருள்களுக்கான விலைகளே இவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளன என நுகர்வோர் சுட்டிக்காட்டி உள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் (2) நடைபெற்ற அமைச்சரவை சந்திப்பில் எட்டப்பட்ட தீர்மானங்களில் சில

1. நிறுவன ரீதியிலான அங்கத்துவ ஒப்பந்தம்

ஸ்ரீமத் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் மற்றும் BCS தகவல் தொழில்நுட்ப சான்றுபடுத்தப்பட்ட நிறுவனத்துக்கும் இடையில், நிறுவன ரீதியிலான அங்கத்துவ ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள ஜனாதிபதி முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2. குத்தகைக்கு காணித்துண்டு

அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுதாபனத்தின் இயலளவை அதிகரிப்பதற்கு கூட்டுதாபனத்தில் போதுமான இடவசதிகள் இன்மையால், ஹொரணை-மில்லாவ பிரதேசத்தில் காணித்துண்டொன்றை குத்தகை அடிப்படையில் அரச மருந்தாக்கல் கூட்டுதாபனத்துக்கு வழங்க பிரதமர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

3. ஆய்வுக்கருத்திட்டத்துக்கான ஒப்பந்தம்

கொழும்பு பல்கலைக்கழகத்துக்கும் ஐக்கிய இராச்சியத்தின் பேர்மின்ஹம் பல்கலைக்கழகத்துக்கும் இடையில், விஞ்ஞானம் மற்றும் சமய நெறிமுறைகள் தொடர்பான உலக கண்ணோட்ட பார்வையை ஆராய்வதற்கான ஆய்வுக் கருத்திட்டத்தை மேற்கொள்வதற்கான ஒப்பந்தத்தை செய்ய கல்வி அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி

4. நோர்வே ஆக்ரிக் பல்கலைக்கழகத்துடனான ஒப்பந்தம்

ருஹுணு பல்கலைக்கழகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், தேசிய நீர் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் நாரா நிறுவனம் என்பவற்றுடன், நோர்வே ஆக்ரிக் பல்கலைக்கழகத்துக்கும் இடையில், ஒப்பந்தம் ஒன்றை செய்துகொள்ள கல்வி அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி

5. விநியோகத் தினத்தைக் கொண்டாடுதல்

பொருள்கள் விநியோகத்துக்குரிய செயன்முறைகள் தொடர்பாக பொதுமக்களைத் தெளிவூட்டும் நோக்கில் தேசிய பொருள்கள் விநியோகத் தினத்தை (National Logistic Day) பிரகடனப்படுத்தவும், அதற்கான முத்திரையொன்றை இவ்வருடம் வெளியிடவும் போக்குவரத்து அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி

6. பொறிமுறையை திருத்தம் செய்தல்

வனவிலங்குகளான யானைகள், சிறுத்தைகள் உள்ளிட்டவைகளின் தாக்குதல் காரணமாக உயிரிழக்கும் அல்லது முழுமையாக அல்லது பகுதியளவில் அங்கவீனம் அடையும் நபர்களுக்கும் அவர்களின் வீடுகள் மற்றும் சொத்துகளுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கும் தற்போது செலுத்தப்பட்டு வரும் பொறிமுறையில் திருத்தம் செய்ய வனவளப் பாதுகாப்பு அமைச்சர் சமர்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

7. வானொலி அலைவரியை ஆரம்பித்தல்

கொரோனா தொற்றால் ஏற்பட்ட சமூக இடைவெளி காரணமாக கல்வியில் தோன்றியுள்ள ஏற்றத்தாழ்வுகளுக்கு தீர்வு காணும் வகையில் நாடளாவிய ரீதியில் வீச்சுக்கொண்டுள்ள இலங்கை ஒலிபரப்புக் கூட்டுதாபனத்துக்குரிய அலைவரிசைகளில் வானொலி கல்வி அலைவரிசையை ஆரம்பிக்க கல்வி அமைச்சரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதிபர்கள், ஆசிரியர்களின்

சம்பளத்தை அதிகரிக்க முடியாது

அமைச்சரவை ஏகமனதாக முடிவு

நாட்டின் தற்போது காணப்படும் இந்நிலைமையில் ஆசிரியர், அதிபர்களின் சம்பளத்தை அதிகரிக்க முடியாதென அமைச்சரவை ஏகமனதாக முடிவுசெய்துள்ளதாக அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் காமினி லொக்குகே, ஆசிரியர்களின் சம்பளக் கோரிக்கைகளை நிறைவேற்ற 56 பில்லியன் ரூபாய் தேவையெனத் தெரிவித்த அவர், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு, அரசாங்கத்தால் தற்சமயம் 56 பில்லியன் ரூபாய் நிதியை செலவழிக்க இயலாதென்றும் தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்தால் ஏற்பட்ட ஆசிரியர், அதிபர் பிரச்சினை குறித்து எதிர்வரும் வரவு -செலவுத் திட்டத்தில் பரிசீலிக்கப்படும்.

இந்த விவகாரம் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்ட

நிலையில் பேச்சுவார்த்தையின் முடிவுகள் குறித்து தொழிற்சங்கத் தலைவர்களுக்குத் தெரிவிக்கப்படும் என்றும் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

போராட்டங்களை நடத்த தொழிற்சங்கங்களுக்கு ஜனநாயக உரிமை காணப்படும் நிலையில் அதனை அரசாங்கம் தடுக்காது என்றும் காமினி லொக்குகே குறிப்பிட்டார்.

இலங்கை மருத்துவ சங்கத்தின் எச்சரிக்கை

நாட்டில், எதிர்வரும் இரண்டு வாரங்களில் டெல்டா திரிபு தொற்றுக்குள்ளாகும் நோயாளிகள் அதிளவில் கண்டறியப்படலாம் என்று இலங்கை மருத்துவ சங்கம் எச்சரித்துள்ளது.

நாளொன்றில் நடத்தப்படும் குறைந்த எண்ணிக்கையிலான பிசிஆர் பரிசோதனைகளே நாளாந்தம் பதிவாகும் தொற்றாளர்களின் எண்ணிக்கைக்குக் காரணமாகும் என்றும் சமூகத்தில் ஐந்து மடங்கான தொற்றாளர்கள் கண்டறியப்படவில்லை என்றும் மருத்துவ சங்கத்தின் தலைவர் டொக்டர் பத்மா குணரத்ன தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினையை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது என்றும் குறிப்பாக மேல் மாகாணத்தில் கண்டுபிடிக்கப்படாத நியாயமான எண்ணிக்கையிலான டெல்டா திரிபு தொற்றுகள் உள்ளன என்றும் சுட்டிக்காட்டினார்.

கொரோனா தொற்றாளர்கள், மரணங்கள் மற்றும் அறிகுறி கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை நிச்சயம் எதிர்காலத்தில் உயரும் என்று அவர் எச்சரித்தார்.

இந்நிலையில், நாட்டில் மேலும் 1,406பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் இலங்கையின் மொத்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 315,175ஆக அதிகரித்துள்ளதாகவும் சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட 1,902 பேர் இன்றையதினம் குணமடைந்துள்ளனர். அதன்படி, 282,770 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என்பதுடன் 27,834 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதேவேளை, மேலும் 63 பேர் நேற்றைய தினம் உயிரிழந்துள்ளனர். அதன் அடிப்படையில், கொரோனா தொற்றுக்கு உள்ளாகி 4,571 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

காளாஞ்சி கொடுக்கும் நிகழ்வு...

■ என்.ராஜ், எம்.றொஷாந்த்

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் வருடாந்த மகோற்சவத்துக்காக கொடிச்சீலை வடிவமைப்பவர்களிடம் காளாஞ்சி கொடுக்கும் நிகழ்வு, நேற்று (03) நடைபெற்றது.

மாட்டுவண்டில் மூலம் நல்லூரில் இருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, கலாசார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும் காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன.

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த பெருந்திருவிழா இம்மாதம் 16ஆம் திகதி வியாழக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரண்டு வாரங்களுக்கும் மேலாக

பால் மாவுக்கு தட்டுப்பாடு

■ வி.ரி.சகா

இலங்கையின் பல பிரதேசங்களிலும் பால் மாவுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக நுகர்வோர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக உள்ளூர் சந்தையில் பால் மாவுக்குத் தட்டுப்பாடுகள் நிலவுகின்றன.

பால் மா நிறுவனங்கள் விலை அதிகரிப்புக்கு அனுமதி கோரியிருந்த நிலையில், அதற்கு அனுமதி வழங்காத நிலையிலேயே இந்தத் தட்டுப்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன்படி சிறுவர்களுக்கான பால் மா தவிர்ந்த மற்றைய அனைத்து பால் மா வகைகளுக்கும் தட்டுப்பாடுகள் நிலவுகின்றன.

இதேவேளை, சில பிரதேசங்களில் சமையல் எரிவாயுக்கு தட்டுப்பாடுகள் நிலவுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

முதல் அரையாண்டில்

SLT குழுமம் நேர்த்தியான நிதிப் பெறுபேறு

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப, தொலைத் தொடர்பாடல்கள் மற்றும் மொபைல் சேவைகள் வழங்குநரான SLT-MOBITEL, 2021 நிதியாண்டின் முதல் அரையாண்டுக் காலப்பகுதியில் உறுதியான நிதிப் பெறுபேறுகளைப் பதிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது. குழுமத்தின் வரிக்கு பிந்திய இலாபமாக முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 29.9% வளர்ச்சியைப் பதிவு செய்து, 6.0 பில்லியன் ரூபாயை பதிவு செய்துள்ளது. பரந்தளவில் செலவுக் கட்டுப்பாடுகள், குழுமத்தில் விரயங்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள், கழிவுகளை பணமாக மாற்றியமை, OPEX செலவுகளை நிர்வகித்திருந்தமை போன்றவற்றினூடாக ஆரோக்கியமான நிதிப்பெறுபேறுகளை எய்தக்கூடியதாக இருந்தது. தொற்றுப்பரவலுடனான காலப்பகுதியில் அதன் வாடிக்கையாளர்கள் அனுகூலம் பெறுவதை SLT-MOBITEL உறுதி செய்திருந்ததுடன், அதற்காக சேவைகளை மேம்படுத்தியிருந்ததுடன், உட்கட்டமைப்பு மற்றும் புத்தாக்கமான தயாரிப்பு வழங்கல்கள் போன்றவற்றையும் மேற்கொண்டிருந்ததாக குழுமம் அறிவித்துள்ளது.

SLT குழுமத்தின் வருமானம் ரூ. 49.9 பில்லியனாக அதிகரித்திருந்தது. மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட காலப்பகுதியில், முன்னைய ஆண்டின் இதே காலப் பகுதியில் 13.3% அதிகரிப்பை வருமானம் பதிவு செய்திருந்தது. தொற்றுப்பரவலுடனான சூழலிலும் வியாபாரத் தொடர்ச்சியில் கவனம் செலுத்தியிருந்தமை இதில் முக்கிய பங்காற்றியிருந்தது. குழுமத்தின் EBITDA (Earnings Before Interest, Tax, Depreciation and Amortisation) என்பது ரூ. 19.6 பில்லியனாக பதிவாகியிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 10.0% வளர்ச்சி யாகும்.

முன்னாள் பணிப்பாளர்கள் நால்வருக்கு

குற்றப் பத்திரிக்கை கையளிப்பு

நிதி மோசடி தொடர்பாக குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்ட ETI நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர்கள் நால்வருக்கு குற்றப் பத்திரிக்கையை நீதிமன்றம் கையளித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

ETI நிறுவனத்தின் பணிப்பாளர்களான நாலக எதிரிசிங்க, ஜீவக எதிரிசிங்க, அஞ்சலி எதிரிசிங்க, அசங்க எதிரிசிங்க ஆகியோருக்கே கொழும்பு மேல் நீதிமன்றம் இக்குற்றப்பத்திரிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

13.7 மில்லியன் ரூபாய் வைப்பு பணத்தை சட்டவிரோதமாக ஏற்றுக் கொண்டமை, முறைகேடாக பயன்படுத்தியமை மற்றும் பணமோசடி ஆகிய குற்றச்சாட்டுகள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1,300 குடும்பங்களுக்கு

காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் திட்டம்

■ எம்.யூ.எம்.சனூன்

ஜனாதிபதியின் ஒரு இலட்சம் காணி உறுதி வழங்கும் திட்டத்தின் கீழ் புத்தளம் மாவட்டத்தில் கரம்பை பிரதேசத்தில் எல்.ஆர்.சி. காணிகளில் வதியும் சுமார் 1,300 குடும்பங்களுக்கு காணிகளுக்கான உறுதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொடுக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

அண்மையில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தலைமையில் கரம்பை ஹுதா மஸ்ஜித், மொஹிதீன் மஸ்ஜித்களில் இது தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், காணி அமைச்சின் பிரதிநிதியாக புத்தளம் மாவட்ட எல்.ஆர்.சி. நிர்வாக உயரதிகாரி ரசிக்கா, எல்.ஆர்.சி. காணிகளுக்கான கல்பிட்டி பிரதேசத்தின் பொறுப்பதிகாரி சமிந்து ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், இம் மக்களுக்கு காணி உறுதிப்

> **ஜனாதிபதியின் ஒரு இலட்சம் காணி உறுதி வழங்கும் திட்டத்தின் கீழ் புத்தளம் மாவட்டத்தில் கரம்பை பிரதேசத்தில் எல்.ஆர்.சி. காணிகளில் வதியும் சுமார் 1,300 குடும்பங்களுக்கு காணிகளுக்கான உறுதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொடுக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது**

பத்திரம் பெற்றுக் கொடுக்கும் திட்டத்தைத் துரிதப்படுத்தி, இந்த வருடத்துக்குள் காணி உறுதிபத்திரங்களைப் பெற்றுக் கொடுக்க ஆவண செய்வதாகவும், அதற்காக இம்மக்கள் பூரண ஒத்துழைப்பை அதிகாரிகளுக்கு வழங்குமாறும் வேண்டிக்கொண்டார்.

இந்நிகழ்வில் கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் சாலக, பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் ஜௌசி ஜமாலுதீன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

முல்லைக்கடல் வழியாக வந்த

திருமலை இளைஞனுக்கு கொரோனா

■ செ.கீதாஞ்சன்

ஆழ்கடல் படகில் பயணித்த போது, திடீரென உடல் உபாதை காரணமாக, முல்லைத்தீவு - மணல்குடியிருப்பு கடற்கரையில் இறக்கி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட திருகோணமலை இளைஞனுக்கு, கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிண்ணியா, ஆலங்கேணி பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞனே, இவ்வாறு தொற்றுக்குள்ளனவராவார்.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் இருந்தே, கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

5 பேர் கொண்ட குழுவினர் கடற்றொழிலுக்காக திருகோணமலையில் இருந்து ஆழ்கடலுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளனர். இதன்போது, இவர்களுடன் பயணித்த குறித்த

இளைஞன் தொடர்ச்சியாக வாந்தி எடுத்துள்ளதை தொடர்ந்து, முல்லைத்தீவு - மணற்குடியிருப்பு கடற்கரையில், அவரை இறக்கிவிட்டுள்ளார்கள்.

முல்லைத்தீவில் இறக்கப்பட்ட இளைஞன் சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின் போது, அவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இளைஞனுக்கு கொரோனா தொற்று இருப்பது தெரியவந்துள்ளதை தொடர்ந்து. திருகோணமலை மீனவர்கள் படகுடன், முல்லைத்தீவு கரையில் இருந்து ஆழ்கடலுக்கு தப்பிச் சென்றுள்ளனர்.

கரைச்சி பிரதேச சபை தவிசாளர்

விசாரணைக்கு அழைப்பு

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதனை விசாரணைக்கு வருமாறு, பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, வெள்ளிக்கிழமை (06), கிளிநொச்சி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்கு


SRI LANKA POLICE
MESSAGE FORM

சமூகமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலையில் உள்ள திருவள்ளுவர் வரைபடத்தில் 'ஈழம்' என்ற சொல் பொறிக்கப்பட்டிருந்தமை குறித்து விசாரணை செய்வதற்கு, தவிசாளரை 4ஆம் மாடிக்கு அழைத்திருந்தனர்.

பின்னர், கிளிநொச்சி பொலிஸாரால் வீதிகளுக்கு பெயரிட்டமை, பொது நிகழ்வுகளில் விளக்கு ஏற்றியமை, கலந்துகொண்டமை, பொத்துவில் பேரணியில் பங்குகொண்டமை, தேசிய மரநடுகை வேலைத்திட்டத்தை மேற்கொண்டமை தொடர்பில் பல்வேறு விசாரணைகளை தவிசாளரிடம் மேற்கொண்டு இருந்தனர்.

இந்நிலையில், அண்மையில், கிளிநொச்சியைச் சேர்ந்த நபர் ஒருவர், தவிசாளருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்திருந்தார். இது தொடர்பில் பொலிஸ் விசாரணையும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன் தொடர்சியாக, நேற்று முன்தினம் (02), தவிசாளருக்கு பயரங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கான அழைப்பு கிடைக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிந்தவூரில் கடலரிப்பைத் தடுப்பதற்கு

கருங்கல்லில் தடுப்புச் சுவர்

திட்ட வரைபு மும்முரம்

■ எம்.எஸ்.எம். ஹனீபா

அம்பாறை, நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பைத் தடுப்பதற்கு கருங்கல்லிலான தடுப்புச் சுவரை நிர்மாணிப்பதற்கு கடல் ஓரம் பேணல் மற்றும் கடல் மூல வள முகாமைத்துவ திணைக்களத்தால் நிதியொதுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, முதற்கட்டமாக 100 மீற்றர் கருங்கல் தடுப்புச் சுவர் நிர்மாணிப்பதற்கு 01 கோடி 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, நிந்தவூர் பிரதேச செயலாளர் டி.எம்.எம். அன்சார், நேற்று (03) தெரிவித்தார்.

நிரந்தரமாக கடலரிப்பைத் தடுப்பதற்கு 250 மீற்றர் கருங்கல்லிலான தடுப்புச் சுவர் நிர்மாணிப்பதற்கு 02 கோடி ரூபாய் செலவு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இவ்வருடத்துக்குள் தடுப்புச் சுவர் நிர்மாணிக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், கடலரிப்பை தடுப்பதற்கு முதற்கட்டமாக மண் மூடை இடவுள்ளதாகவும், நிரந்தரமாக கடலரிப்பைத் தடுப்பதற்கு கருங்கல்லிலான தடுப்புச் சுவர் நிர்மாணிப்பதற்கான திட்ட வரைபு மேற்கொள்ளப்பட்டு உள்ளதாகவும் நிந்தவூர் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

வவுனியாவில் இதுவரை

54,000 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டு உள்ளது

■ க. அகரன்

வவுனியாவில், 30 வயதுக்கு மேற்பட்டோருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை, சுகாதாரப் பிரிவினர் மற்றும் இராணுவத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வவுனியாவில் தடுப்பூசி செலுத்த ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து நேற்று முன்தினம் (02) வரை, 54,000 பேருக்குத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன என, சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

யாழில் இன்று அமைதிப் போராட்டம்

■ எஸ்.நிதர்ஷன்

கொத்தலாவல தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்ட மூலம் மற்றும் பல்கலைக்கழகச் சட்டத்தில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கும் திருத்தம் ஆகியவற்றை எதிர்க்கும் வகையில், யாழ்ப்பாணத்தில், இன்று (04) அமைதிப் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இன்று நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுழைவாயிலின் வெளியிலும் இராமநாதன் வீதியின் இருமருங்கிலும், இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், இலங்கை ஆசிரியர் சங்கம், சமூக நீதிக்கான வெகுஜன இயக்கம், வல்லமை புதிய அதிபர் சங்கம், முற்போக்கு ஜனநாயக ஆசிரியர் சங்கம் ஆகியன இணைந்து இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன.

நிரூபா தெரிவானார்

■ வி.ரி.சகாதேவராஜா

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பட்டதாரி பயிலுநராகக் கடமையாற்றிய செல்வி எஸ். நிரூபா, இலங்கை நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று, நிர்வாக சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அவரைக் கௌரவிக்கும் வகையில், பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் தலைமையிலான நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

மைதானத்தில் விளையாடிய

17 இளைஞர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை

■ வா.கிருஸ்ணா

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிச் செயற்பட்ட 17 இளைஞர்கள் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மகிழடித்தீவு விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் (02) மாலை விளையாடிய இளைஞர்களே இவ்வாறு பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அப்பகுதிக்குச் சென்ற பட்டிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் க.ரமேஸ் தலைமையிலான சுகாதாரக் குழுவினரும் கொக்கட்டிச்சோலை பொலிஸாரும் விளையாட்டைத் தடுத்து நிறுத்தியதுடன், இளைஞர்களுக்கு கடுமையான எச்சரிக்கையையும் விடுத்துள்ளனர்.

விளையாட்டில் ஈடுபட்டிருந்த இளைஞர்கள் முகக்கவசங்கள் அணியாத நிலையில் காணமுடிந்ததாக, பட்டிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இவ்வாறு பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள இளைஞர்களில் யாராவது தொற்றாளர்களாக இனங்காணப்பட்டால், அனைவரும் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்படுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலமாக கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், சிலர் மேற்கொள்ளும் செயற்பாடுகள் பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டும் சுகாதாரப் பிரிவினர், அவ்வாறானவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தாதிக்கு கொரோனா

■ கே.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நெட்டாங்கண்டல் ஆதார வைத்தியசாலையில் பணியாற்றும் தாதிய உத்தியோகத்தர் ஒருவருக்கு, கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, சக பணியாளர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 30ஆம் திகதியன்று, நெட்டாங்கண்டல் ஆதார வைத்தியசாலையில் பணியாற்றும் பாண்டியன்குளம், செல்வபுரத்தைச் சேர்ந்த தாதிய உத்தியோகத்தர் ஒருவர், சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு சென்ற நிலையில், அங்கு அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வீடு உடைத்து கொள்ளை

வயோதிபர் காயம்

■ கே.கீதாஞ்சன்

புதுக்குடியிருப்பு, மந்துவில் பகுதியில், 1ஆம் திகதியன்று, வீடொன்றை உடைத்து உட்புகுந்த கொள்ளையர்கள், வீட்டில் இருந்தவர்களைத் தாக்கிவிட்டு, வீட்டில் இருந்த நகை, பணம் என்பனவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளார்கள். கொள்ளையர்களின் தாக்குதலில் காயமடைந்த வீட்டில் இருந்த வயோதிபர் ஒருவர், புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதிகாலை வேளையில், வீட்டொன்றுக்குள் புகுந்த நான்கு பேர் கொண்ட கொள்ளையர்கள், இவ்வாறு வீட்டில் இருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு, வீட்டில் இருந்த பெண்கள் அணிந்திருந்த தாலிக்கொடி, பொக்ஸ்செயின், இரண்டு சங்கிலிகள் என்பவற்றை அபகரித்ததுடன், வீட்டில் இருந்த இரண்டரை இலட்சம் ரூபாய் பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

சின்னக் கதிர்காமம் கொடியேற்றம்

■ வா.கிருஸ்ணா

'சின்னக் கதிர்காமம்' எனப் போற்றப்படும் மட்டக்களப்பு, மண்டூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த உற்சவம், பண்டைய கால முறைப்படி, நேற்று முன்தினம் (02) மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கொவிட்- 19 அச்சுறுத்தல் காரணமாக, கோவில் நிர்வாகத்தினர், மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்கள் ஆகியோர் அனுமதிக்கப்பட்டு, அவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், கோவிலுக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

21 தினங்கள் நடைபெறவுள்ள வருடாந்த உற்சவத்தில் நேர்த்திக்கடன் செலுத்துதல், காவடியெடுத்தல் போன்ற நிகழ்வுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி, மட்டக்களப்பு வாவியில் முருகப்பெருமானுக்கான தீர்த்தோற்சவத்துடன் வருடாந்த உற்சவம் நிறைவுபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மன்னாரில்

கொரோனா மரணம் 10ஆக அதிகரிப்பு

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்குள்ளாகி மரணித்தவர்களின் எண்ணிக்கை 10ஆக அதிகரித்துள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று (03) காலை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த மூன்று நாள்களில் 66 கொரோனா தொற்றாளர்கள் மன்னார் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இன்று (நேற்று) அதிகாலை கொரோனா மரணம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

களுத்துறையில் இருந்து மன்னாருக்கு சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்ட 66 வயதுடைய பெண்ணொருவர் கொரோனா தொற்றுக் காரணமாக தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, உயிரிழந்துள்ளார்.

"இவருடன் சேர்த்து மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10ஆக அதிகரித்துள்ளது.

"இதேவேளை, மன்னார் மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட 52,628 பேர் முதலாவது தடுப்பூசியையும் 500 பேர் இரண்டவது தடுப்பூசியையும் செலுத்திக்கொண்டுள்ளனர்.

"மக்கள் தடுப்பூசியை செலுத்திக் கொண்டமையால், சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுவதில் சிறிது தளர்வு ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. எனவே, தடுப்பூசியை செலுத்திக் கொண்டாலும் மக்கள், தமது சுகாதார நடைமுறைகளைத் தொடர்ந்தும் உரிய முறையில் பின்பற்ற வேண்டும்" என்றார்.

புதிய கல்விப் பணிப்பாளர்

கடமையை பொறுப்பேற்றார்

■ க.விஜயரெத்தினம், எம்.எஸ்.எம்.நூர்தீன்

கிழக்கு மாகாண புதிய கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம், தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

இதனையடுத்து, பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தில் வைத்து பட்டிருப்பு கல்வி வலய உத்தியோகத்தர்களால் பணிப்பாளர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

மேற்படி வைபவத்தில் பட்டிருப்பு வலக் கல்வி அலுவலக நிர்வாகத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார் உட்பட வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், கல்வி அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஆசிரிய தொழிற்சங்கங்களின் போராட்டங்களுக்கு

முழுமையான ஆதரவு உண்டு

இ.தே.தோ. தொழிலாளர் சங்கம் தெரிவிப்பு

அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துள்ள போராட்டத்துக்கு, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் தன்னுடைய முழுமையான ஆதரவைத் தெரிவிப்பதாக பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

தொடர்ந்துரைத்த அவர்,

"பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியிலும் ஆசிரியர்களின் இப்போராட்டத்துக்கு என்னுடைய முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குவேன்" என்றார்.

"சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து அதிபர், ஆசிரியர்கள் முன்னெடுத்துள்ள போராட்டத்துக்கு, விரைவில் தீர்வு வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

"கடந்த 24 வருட காலமாக இப் பிரச்சினை தொடர்ந்து கொண்டே செல்கின்றது. ஆனாலும், இன்றளவும் நிலையான ஒரு தீர்மானம் எட்டப்படவில்லை என்பது வருத்தத்துக்குரிய விடயமாகும். ஆசிரியர்கள் நிகழ்நிலை கற்பித்தலில் இருந்து விலகி உள்ள நிலையில், ஆளும் தரப்பில் உள்ள சில உறுப்பினர்கள், ஆசிரியர்களின் இச்செயற்பாட்டை மிகவும் மோசமாகச் சித்திரித்து, ஆசிரியர்களின் மனங்களைப் புண்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள். இச் செயற்பாட்டுக்கு, எனது கண்டனத்தை தெரிவிக்கின்றேன்" எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



கொரோனா செய்தித் துளிகள்

1. கம்பளை ஆதார வைத்தியசாலையின், கொரோனா சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், தப்பியோடிய தொற்றாளர் ஒருவர், தொழுவ பிரதேசத்தில் வைத்து நேற்று (03) காலை கண்டுபிடிக்கப்பட்டு, மீண்டும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (நவி)

2. அதிகம் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதையடுத்து, தனிமைப்படுத்தப்பட்ட பசறை, பிளானிவத்தை தோட்டம், தனிமைப்படுத்தலிலிருந்து நேற்று (03) தொடக்கம் விடுவிக்கப்பட்டுள்ளது. (ந. மலர்வேந்தன்)

3. தலவாக்கலை, தேயிலை ஆராய்ச்சி நிறுவன ஊழியர்கள், சென்கூம்ஸ் தோட்டத்தைச் சேர்ந்த 47 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளதுடன், இவர்களுடன் தொடர்பிலிருந்த 213 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (பி.கேதீஸ்)

4. பொகவந்தலாவை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஆரியபுர, டின்சின், பீரட், செப்பல்டன், மோரா ஆகிய இடங்களிலிருந்து 16 தொற்றாளர்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (சுதத். எச். எம். ஹேவா)

5. ஹட்டன்-டிக்கோயா நகர சபையில் கடமையாற்றும் எழுதுவினைஞர் ஒருவருக்கும் ஹட்டன் தொழில் அலுவலகத்தில் கடமையாற்றும் எழுதுவினைஞருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (சுதத். எச். எம். ஹேவா)

இரத்தினபுரியில்

போதை மாத்திரை விற்பனை அதிகரிப்பு

பெற்றோர்களுக்கு எச்சரிக்கை

■ ஏ.ஏ.எம்.பாயிஸ்

இரத்தினபுரி மாவட்டத்தில், தோட்டப்புற இளைஞர்களை இலக்கு வைத்து, போதைப்பொருள் விற்பனை இடம்பெற்று வருவதாக சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறுகிய காலத்தில் உடல், உளம், உயிர் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய போதை மாத்திரைகள் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் போதை மாத்திரை ஒன்றின் விலை 10 முதல் 20 ரூபாயாக காணப்படுகின்ற போதிலும், இவற்றை 200 தொடக்கம் 250 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுவதாகவும், தரகர்கள் மூலம் மிகவும் சூட்சுமமாக இளைஞர்களுக்கு இவை விநியோகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினபுரி, பலாங்கொட, காவத்தை பெல்மதுளை, நிவித்திகலை, எம்பிலிபிட்டிய, எஹலியகொடை, குருவிட்ட, இறக்குவானை போன்ற நகரங்களிலிருந்து, புற நகரங்களுக்கும் கிராமிய மற்றும் தோட்டப்பகுதிகளுக்கும் இவை வியாபித்து வருவதால் பெற்றோர் அவதானமாக இருக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பெரண்டினாவின் அன்பளிப்பு

■ நிலமேகம் பிரசாந்த், என். ஆராச்சி

நுவரெலியா மாவட்டத்தில் ஐந்து பிரதேசங்கள் தெரிவுசெய்யப்பட்டு, வறுமைக் கோட்டில் வாழும் 209 குடும்பங்களுக்கு 2,000 ரூபாய் பெறுமதியான வவுச்சர்களை பெரண்டினா நிறுவனம் வழங்கி வைத்தது.

இதேவேளை, பெரண்டினா நிறுவனத்தால், வரக்காபொல ஆரம்ப வைத்தியசாலை, கித்துல்கல பிரதேச வைத்தியசாலை

> வரக்காபொல, கித்துல்கலக்கு ஒரு மில்லியன் ரூபாய் மருத்துவ உதவி

என்பவற்றுக்கு, ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

45.4 % குழந்தைகளை வதைக்கின்றனர்

■ சேஹன் செனவிரத்ன

இலங்கையில் 45.4 சதவீதமான குழந்தைகள் ஏதோவொரு வகையில், உடல் அல்லது உள ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாவதுடன், 6.9 சதவீதமான குழந்தைகள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாவதாக, பேராதனை பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான பிரிவின் பிரதானி கலாநிதி குமாரி தோரதெனிய தெரிவித்தார்.

மத்திய மாகாண ஆளுநரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இலங்கையில் 18 வயதுக்குட்பட்ட தாய்மாரின் எண்ணிக்கை 4.5 சதவீதம் காணப்படும் அதேவேளை, நுவரெலியா மாவட்டத்தில் இதன் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. நாம் முன்னெடுத்த ஆய்வுகளில் இலங்கையில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான சிறுவர் தொழிலாளர்கள் காணப்படும் நிலையில், தொழிலாளர் திணைக்களம், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை என்பவற்றின் தரவுகளில் இவை மாறுபட்டுக் காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

ரூ 1,000 முழுமையாகக் கிடைக்கும் வரை

கம்பனிகளுக்கு எதிரான போராட்டங்கள் ஓயாது

■ துஷாரகஷான்

தொழிலாளர்களுக்கு 1,000 ரூபாய் நாளாந்த சம்பளம் முழுமையாகக் கிடைக்கும் வரை, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் போராட்டங்கள் ஓயாது என, மலையக மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளரும் மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான ஆர். இராஜாராம் தெரிவித்தார்.

மஸ்கெலியா, லக்கம் தோட்டத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

"கம்பனிகளின் இத்தகைய தான்தோன்றித் தனமான செயற்பாடுகள் கடந்த 4 மாதங்களாக தொடர்ந்து கொண்டே இருப்பதால், சகித்துக்கொள்ள முடியாத தொழிலாளர்களின் போராட்டங்கள் நாளுக்கு நாள் தோட்டங்கள் தோறும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. எனவே, தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு அரசாங்கம் தலையிட்டு, ஆயிரம் ரூபாய் சம்பளம் கிடைக்க தகுந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும்" என்றார்.

நீதி கோரி...

■ எம். கிருஷ்ணா, ஆ.ரமேஸ், சந்ரு, என்.ஆராச்சி, எம். செல்வராஜா

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் உயிரிழந்த டயகம சிறுமியின் மரணத்துக்கு நீதி கோரி, நேற்றும் (03) மலையகத்தின் பல இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

இதற்கமை, காசல்ரீ, நுவரெலியா-பம்பரகலை தோட்டம், யட்டியாந்தோட்டை-களனிவத்த, மடுல்சீமை ஆகிய இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

மலையகத்திலும் பால்மாவுக்குத் தட்டுப்பாடு

■ இரா.யோகேசன்

மலையகத்தின் பல நகரங்களிலும் பால்மாவுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, கினிகத்தேனை, வட்டவளை, தலவாக்கலை, ஹட்டன், மஸ்கெலியா உள்ளிட்ட பல நகரங்களில் பால்மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், குழந்தைகளுக்கு புட்டிப்பாலை வழங்கும் பெற்றோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே , போதுமானளவு பால்மா கையிருப்பில் உள்ளதாக அமைச்சரவை சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், வர்த்தக நிலையங்களில் பால்மா பதுக்கப்பட்டிருக்கலாம் என்றும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இரத்தினக்கற்களை விற்க

சர்வதேச சந்தை இலங்கையில் அவசியம்

இரத்தினக்கல் வர்த்தக அமைப்பு வேண்டுகோள்

■ ஏ ஏ.எம்.பாயிஸ்

இரத்தினபுரி, பெல்மதுளை பிரதேசத்தில் கிடைக்கப்பெற்ற உலகின் மிகப் பெறுமதி வாய்ந்த இரத்தினக்கல் உட்பட, நாட்டில் கிடைக்கும் பெறுமதியான இரத்தினக் கற்களை விற்பனை செய்ய சர்வதேச வர்த்தகர்கள், இலங்கைக்கு அழைக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ள இரத்தினபுரி மாவட்ட இரத்தினக்கல் வர்த்தக சங்கத்தின் தலைவர் புன்சிரி தென்னகோன், அவர்களைக் கவரக்கூடிய வகையில், விளம்பர முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமெனவும் கடந்த 1 1/2 வருட காலமாக பிரசித்தி பெற்ற இரத்தினக்கல் சர்வதேச சந்தைகள் கொரோனா நெருக்கடி காரணமாக நடத்தப்படவில்லை. எனவே, இலங்கையில் அவசரமாக சர்வதேச இரத்தினக் கல் விற்பனைக் களம் அமைத்துக் கொடுக்கப்படுதல் வேண்டுமெனவும் கூறினார்.

கொட்டகலை சுரங்கப் பாதை ஆபத்தானது

■ கே.சுந்தரலிங்கம்

ஹட்டன்- நுவரெலியா பிரதான பாதையில் அமைந்துள்ள, கொட்டகலை புதிய சுரங்க வழி பாதை, தற்போது ஆபத்தை ஏற்படுத்தும் இடமாக மாறி வருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த சுரங்கத்தில் பல இடங்களில், பெரிய அளவில் நீர் கசிந்து வெளியேறுவதாகவும் தொடர்ச்சியாக நீர் கசிவதால் வீதி வழுக்கும் நிலைக்கு மாறியுள்ளதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

சுரங்கத்தில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகளின் மீதும் நீர் கசிவதால் தற்போது மின்குமிழ்கள் செயலிழந்து இருளடைந்து

காணப்படுகின்றன.

தொடர்ச்சியாக நீர் கசிவதால் சுரங்கத்தின் உறுதி சீர்குலைந்து இடிந்து விழும் ஆபத்தையும் எதிர்நோக்கியுள்ளது என்றும், இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

> சுரங்கத்தில் பல இடங்களில், நீர் கசிவதுடன் தொடர்ச்சியாக நீர் கசிவதால் வீதி வழுக்கும் நிலைக்கு மாறியுள்ளதுடன் சுரங்கத்தின் உறுதி சீர்குலைந்து இடிந்து விழும் ஆபத்தையும் எதிர்நோக்கியுள்ளது

இந்த வீதியைப் பயன்படுத்தும் பாதசாரிகள், வாகன சாரதிகள் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதுடன், விபத்துகள் அதிகம் ஏற்படலாம் என அஞ்சப்படுகின்றது.

இதேவேளை, அண்மையில் குறித்த சுரங்கப்பகுதியில் ஓட்டோவும் லொறியும் விபத்துக்குள்ளாகி ஒருவர் மரணமடைந்தமையும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியதாகும்.

உள்முரண்பாடு களைவதே உயிர்களுக்கு உத்தரவாதமளிக்கும்

செய்திகளையும் ஊடகவியலாளர்கள் சந்திப்பில் எதிரெதிர் தரப்புகளால் முன்வைக்கப்படும் வாதங்களையும் கேட்கும் மக்கள், 'எதைச் செய்வது', 'எவற்றைச் செய்யாமல் விடுவது' என்பது தொடர்பில், தீர்மானம் எடுக்கமுடியாது தடுமாறிவிடுவர். அந்தளவுக்கு ஒரு குழப்பகரமான நிலைமையே நிலவுகிறது.

கொரோனாவுக்குப் பின்னர், இவ்வாறான விடயங்கள் புதிதல்ல. என்றாலும், மாகாணங்களுக்கு இடையிலான பொது போக்குவரத்துகள், 50 நாள்களுக்குப் பின்னர், ஓகஸ்ட் முதலாம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டன.

தலைநகர் உள்ளிட்ட பெருநகரங்களில் பல மாதங்களாக முடங்கிக்கிடந்தவர்கள், சொந்த ஊர்களுக்குப் படையெடுக்க ஆரம்பித்துவிட்டனர். இதனால், பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் பெரும் சனநெரிசல் ஏற்பட்டது. இதனால், 'போக்குவரத்து கொத்தணி' உருவாகிவிடுமோ என்றொரு பேரச்சம் ஏற்பட்டது. நிலைமை இன்னுமின்னும் மோசமடையுமென சுகாதார தரப்பினர் எச்சரித்தனர். அத்தியாவசிய சேவைகளுக்காக மட்டுமே, பொதுப் போக்குவரத்தை பயன்படுத்த முடியுமென அரசாங்கம் அறிவித்தது.

தனித்து எடுக்கப்பட்ட தீர்மானமொன்று பிழைத்துவிடுமாயின், அடுத்தவரின் தலையில் சுமத்திவிடுவது ஒன்றும் புதிதல்ல. அதேபோலதான், மாகாணங்களுக்கு இடையிலான பயணங்கள் திறக்கப்பட்டதன் பின்னரான விமர்சனங்களை, தீர்மானத்தை எடுக்காத ஒரு தரப்பு சுமக்கவேண்டியதாயிற்று.

சுகாதார துறையினருடன் கலந்துரையாடி இத்தீர்மானம் எடுக்கப்படவில்லை என்பது மட்டுமே உண்மையாகும். கொரோனா விவகாரத்தில் தீர்மானங்களை எட்டும்போது, அதனோடு தொடர்புடைய சகல தரப்பினருடன் கலந்துரையாடி, தீர்மானத்தை அறிவிப்பதே சாலவும் சிறந்தது.

ஆகையால், அரசாங்கத்துக்கும் ஏனைய துறைசார் பிரிவுகளுக்கும் இடையிலிருக்கும் உள்முரண்பாடுகள் களையப்படவேண்டும். அதனூடாகவே கொரோனாவால் வேண்டுமென்றே காவுகொள்ளப்படும் உயிர்களைக் காப்பாற்ற முடியும்.

சரிந்துகிடக்கின்ற பொருளாதாரத்தை, கொஞ்சம் கொஞ்சமாக தலைதூக்கச் செய்யவேண்டுமென்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனினும், வீரியம் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ், தொற்றிக்கொள்வதற்கு இடமளிப்பதை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாது.

இதற்கிடையே, திருமண வைபவங்களை நடத்துவதற்காக வழங்கப்பட்டிருக்கும் தளர்வை, மீளவும் வாபஸ் பெற்றுக்கொள்வதற்கு உரிய தரப்பினர் ஆலோசித்து வருவதாக அறியமுடிகின்றது. விதிக்கப்படும் கட்டுப்பாடுகளை முறையாகப் பின்பற்றத் தவறுவோமாயின், நாடு முழுமையாகத் திறக்கப்படுவது பின்னோக்கிச் சென்றுகொண்டே இருக்கும்.

இது, ஒவ்வொரு விடயங்களிலும் பின்னடைவை ஏற்படுத்திவிடும். ஆகையால், தீர்மானங்களை எடுப்பவர்கள் மட்டுமன்றி, பொதுமக்களும் மிகமிக அவதானமாக இருக்கவேண்டும். ஆகக்கூடிய முயற்சிகளால் தடுப்பூசிகள் நாட்டுக்கு வந்துசேர்கின்றன. அவற்றை, முறையாகப் பெற்றுக்கொள்வதற்கும் சகலரும் முயற்சிக்க வேண்டும்.

தானும் தன்னைச் சுற்றியிருப்பவர்களும் நலமாய் இருக்கவேண்டும். இல்லையேல், 14 நாள்கள் முடக்கத்துக்குள்ளும் தனிமைப்படுத்தலுக்குள்ளும் சிக்கிக்கொள்ளும் நிலைமை ஏற்படும். அதேபோல, நோயெதிர்ப்பு மிக்க உணவுகளை உட்கொள்வது சிறந்த தெரிவாகவே அமையும். இவற்றையெல்லாம் முறையாகப் பேணவேண்டுமாயின், உள் முரண்பாடுகளைக் களைவதே உத்தமம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



வாழ்வியல் தரிசனம்

சிரிக்காதவன் தன்னைச் சுருக்கி கொள்கின்றான். அகஉணர்வின் ஊடாக ஏற்படும் கிளர்ச்சி, சிரிப்பாகப் பரிணமிக்கின்றது.

நகைப்பூட்டும் விடயங்களைக் கேட்கும் போதும் குழந்தைகளின் குறும்புகளை இரசிக்கும் போதும் மெல்லிய சிரிப்புத் தானாகவே உருவாகின்றது.

சிலர், நகைச்சுவைகளை இரசித்து பலத்த ஓசையுடன் சிரிப்பதுண்டு. திரைப்படங்களில் வில்லன்களின் பார்வையுடன் கூடிய நகைப்பு சற்று வித்தியாசமானது. அடக்கமுடியாத தொடரான சிரிப்பும் ஒரு ரகம்.

இரசனை உள்ள விடயங்களைக் கூட, சிலர் கண்டுகொள்ளவே மாட்டார்கள். 'உம்'மென்று எதுவும் தெரியாததைப் போல இருந்துவிடுவார்கள்.

சிரிப்பு, ஆனந்தத்தின் இருப்பிடம்; ஏன் பிறப்பிடமும் கூட! மனிதன் தனது வாழ்க்கையைச் சந்தோஷமாக வைத்திருக்க, கலகலப்பூட்டும் வார்த்தைகளின் அர்த்தங்களைப் புரிந்து கொள்ளவேண்டும். கவலைகள், ஏக்கங்கள் போன்றவற்றைக் களைய, சுதந்திரமாக இரசனையுடன் சிரிப்பீர்களாக!

பருத்தியூர் பால- வயிரவநாதன்

தடுப்பூசியும் பயனற்றதாகி விடுமா?

எம்.எஸ்.எம். ஐயூப்

கொவிட் -19 தொற்றின் நான்காவது அலையின் நுழைவாயிலில் இலங்கை நிற்கின்றதா? அல்லது, ஏற்கெனவே அதற்குள் புகுந்துவிட்டதா என்பது, புரியாத புதிராக இருக்கிறது.

ஏனெனில், குறைந்து வந்த கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல், கடந்த ஒரு வார காலமாக, வேகமாக மீண்டும் அதிகரித்து வருகிறது. அந்தவகையில், நாம் ஏற்கெனவே நான்காம் அலையில் நுழைந்துவிட்டோம் என்றே தெரிகிறது. ஆனால், அதைப் பற்றி எவரும் பேசுவதில்லை.

இன்னுமொரு வகையில், தற்போது சுகாதாரத் துறையினர் வெளியிட்டு வரும் புள்ளிவிவரங்கள், உண்மையானவையா என்ற சந்தேகமும் எழுகிறது. ஏனெனில், புள்ளிவிவரங்கள் மூலம் தொற்று அதிகரித்து வருவதாகத் தெரிய வந்தபோதிலும், தொற்றைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை, அரசாங்கம் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல், மேலும் தளர்த்த நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, வீடுகளில் இருந்து கடமையாற்றியவர்கள் உள்ளிட்ட சகல அரச ஊழியர்களும் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல், அலுவலகங்களுக்குச் சென்று கடமையாற்ற வேண்டும் எனக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதற்காகப் பொதுப் போக்குவரத்து சேவைகளும் நடைபெறுகின்றன.

இலங்கையில், கொவிட்- 19 மூன்றாவது அலை, கடந்த தமிழ்- சிங்கள புத்தாண்டைத் தொடர்ந்தே ஆரம்பமானது. புத்தாண்டு காலத்தில் மக்கள் நடமாட்டம் அதிகரிக்கும் என்பதால், சமூக நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என, சுகாதாரத் துறையினர் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டனர். ஆனால், அது 'ஜனரஞ்சக முடிவு' அல்ல; கட்டுப்பாடுகளால் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்பதால், அந்த ஆலோசனையை அரசாங்கம் புறக்கணித்து இருந்தது.

அதன்விளைவாக, ஏப்ரல் மாதம் இறுதியில் இருந்து, தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்தது. நாளொன்றுக்கு 3,500 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். அதன்படி, முன்னரை விட இறுக்கமான கட்டுப்பாடுகளை விதிக்க, அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது. அதன் விளைவாக, ஜூலை மாதம் ஆரம்பத்தில், நாளாந்த தொற்றாளர் எண்ணிக்கை 1,500 வரை குறைந்தது.

ஆனால், கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை அவ்வளவாகக் குறையவில்லை. நாளாந்த நோயாளர் எண்ணிக்கை பெரும்பாலும் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கையில் தங்கியிருப்பதால், அதன் மூலம் நாட்டின் கொவிட்-19 நோயின் உண்மையான நிலைமையை அறிய முடியாது. பரிசோதனைகள் குறைந்தால், நோயாளர்களின் எண்ணிக்கையும் குறைவாகவே இருக்கும். மரணங்களின் எண்ணிக்கை, நாட்டில் கொவிட்- 19 நோயின் உண்மையான நிலைமையை அறிய, அதைவிடப் பொருத்தமான அளவீடாகும்; அது அவ்வளவாகக் குறையவில்லை.

இந்தநிலையில், அரசாங்கத்தின் தலைவர்களின் கருத்துப்படி, சுகாதார அமைச்சு சுகாதார கட்டுப்பாடுகளை வெகுவாகக் குறைத்தது. கடைகள், பஸ், ரயில், வீதியோர சந்தைகள், சமய வழிபாட்டுத்தலங்கள் மடடுமன்றி மஸாஜ் கிளினிக்குகள் போன்றவையும் இயங்க அனுமதிக்கப்பட்டன.

இது ஆபத்தான முடிவு என, அப்போதே இலங்கை மருத்துவ சங்கம், சுகாதார பரிசோதகர்கள் சங்கம் போன்ற அமைப்புகள் எடுத்துக் காட்டிய போதிலும் அரசாங்கம் அதற்குச் செவிசாய்க்கவில்லை. விளைவு, எதிர்பார்த்ததைப் போலவே இருக்கிறது.

இப்போது நாளாந்த தொற்றாளர்களின் எண்ணிக்கை, மீண்டும் 2,500 தாண்டும் நிலையில் இருக்கிறது. 10 நாள்களுக்கு முன்னர், அது 1,600ஆகவே இருந்தது. ஞாயிற்றுக்கிழமை (01) வெளியான கொவிட்-19 மரணங்களின் எண்ணிக்கை 67ஆக இருந்தது. இலங்கையைப் பொறுத்தவரை, இது மிகவும் உயர்ந்த எண்ணிக்கையாகும். ஒரு வாரத்துக்கு முன்னர், அந்த எண்ணிக்கை 45 ஆகவே இருந்தது.

இந்தப் பின்னணியில் தான், மேலும் கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் வகையில், சகல அரச ஊழியர்களும் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல், அலுவலகங்களிலேயே கடமையாற்ற வேண்டும் என, அரசாங்கம் கட்டளை பிறப்பித்துள்ளது. அத்தோடு மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து தடையும் நீக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மார்ச் மாதம் முதல், பல்வேறு மட்டத்திலான கட்டுப்பாடுகளை, அடிக்கடி விதித்ததன் காரணமாக, வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தைப் பற்றிச் சிந்தித்தே, அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

கொவிட்-19 முதலாவது அலையின் போது, பொருளாதாரப் பாதிப்பைப் பற்றிச் சிந்தித்து, பாரிய வியாபார நிறுவனங்கள் மீது கட்டுப்பாடுகளை விதிக்காததன் விளைவாக, பிரண்டிக்ஸ் நிறுவனத்தின் மூலம், மோசமான இரண்டாவது அலை உருவாகியது. அதனால், முன்னரை விடப் பொருளாதார பாதிப்பு ஏற்பட்டது.

இரண்டாவது அலையின் போதும், பொருளாதார பாதிப்பைப் பற்றிச் சிந்தித்து, சித்திரை புதுவருடப் பிறப்புக் காலத்தில் கட்டுப்பாடுகளை விதிக்க, அரசாங்கம் முன்வரவில்லை. அதன் விளைவாக, இரண்டாவது அலையை விட, மிகவும் மோசமான மூன்றாவது அலையை நாடு உருவாக்கிக் கொண்டது. அதனால், முன்னெப்போதும் இல்லாத பொருளாதார பாதிப்பு நாட்டுக்கு ஏற்பட்டது.

சுருக்கமாக, அரசாங்கம் சிறிய நட்டத்தைப் பற்றிச் சிந்தித்து, பெரிய நட்டமொன்றை உருவாக்கிக் கொள்கிறது. அவ்வாறான நிலையில்தான், தற்போது அரச அலுவலகங்கள் முற்றாகத் திறக்கப்பட்டுள்ளன. மிக வேகமாகப் பரவும் அதேவேளை, கூடுதல் பாதிப்பை ஏற்படுத்தும் கொவிட்-19 நோயின் டீ.1.617.2 அல்லது 'டெல்டா' என்ற திரிபு, நாட்டில் பரவி வரும் நிலையிலேயே, அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது.

இந்தத் திரிபு, எதிர்வரும் மாதங்களில் உலகெங்கும் மிகவேகமாகப் பரவி, பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என, உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது. பரவும் வேகம் மட்டுமன்றி, அதன் தாக்கமும் அதிகம் என அந்நிறுவனம் கூறுகிறது.

ஏனைய திரிபுகளோடு ஒப்பிடுகையில், 'டெல்டா' திரிபு தாக்கியவர்கள், மருத்துவமனைகளை நாடும் அளவு 120 சதவீதத்தால் அதிகம் என்றும் அவசர சிகிச்சை பெறும் நிலை 287 சதவீதம் அதிகம் என்றும் மரணங்கள் 137 சதவீதம் அதிகம் என்றும் கனடாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

2020ஆம் ஆண்டின் இறுதியில் இருந்தே, 'டெல்டா' திரிபு உலகில் சில நாடுகளில் காணப்பட்ட போதிலும், அண்மைய மாதங்களில் இந்தியா, அவுஸ்திரேலியா, வங்காளதேசம், சீனா, டென்மார்க், இந்தோனேசியா, ரஷ்யா, சிங்கப்பூர், ஐக்கிய இராஜ்ஜியம் போன்ற நாடுகளில் வேகமாகப் பரவி வருகிறது. அமெரிக்காவில் புதிய தொற்றாளர்களில் 80 சதவீதமானோரை அது தாக்கியுள்ளதாக, அந்நாட்டின் பிரதான நோய் தடுப்பு மையம் கூறுகிறது. கடந்த ஜூன் 19 ஆம் திகதிக்கும் ஜூலை 23 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில், அமெரிக்காவில் தொற்றாளர் எண்ணிக்கை 300 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

'டெல்டா' வைரஸ் திரிபு, கொழும்பு மாவட்டத்தில் 20 முதல் 30 சதவீதமான மக்களிடையே பரவியிருக்கலாம் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். ஏனைய மாவட்டங்களிலும் அது பரவி இருக்கலாம் என்றும் அவர் கூறியிருந்தார். இந்த வைரஸ் திரிபின் காரணமாக, எதிர்வரும் மாதங்களில் இலங்கை பெரும் ஆபத்தை எதிர்நோக்கும் நிலை உருவாகி இருப்பதாக, உலகப் புகழ் பெற்ற வைரஸ் விஞ்ஞானி பேராசிரியர் மலிக் பீரிஸ் சனிக்கிழமை (31) தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், சகல அரச ஊழியர்களையும் வேலைக்கு அழைக்கும் போது, தற்போது மும்முரமாக இயங்கி வரும் தடுப்புசி திட்டத்தின் மீதே, அரசாங்கம் முழு நம்பிக்கையையும் வைத்திருப்பதாகத் தெரிகிறது. எனினும், அமெரிக்கா, ஐரோப்பா விஞ்ஞானிகள் தெரிவிக்கும் கருத்துகளைப் பார்த்தால், தடுப்பூசியின் மீதும் எவ்வளவு காலம் நம்பிக்கை வைத்திருக்கலாம் என்ற கேள்வி எழுகிறது. ஏனெனில், தடுப்பூசியின் செயற்றிறனை மீறிச்செல்லக் கூடிய, புதிய கொரோனா வைரஸ் திரிபுகள் உருவாகும் நிலை காணப்படுவதாக, அந்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக, தடுப்பூசி போட்டுக் கொண்டவர்கள் முகக்கவசங்களை அணியத் தேவையில்லை என முன்னர் அறிவித்து இருந்த அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம், அவர்களும் மீண்டும் முகக்கவசம் அணிய வேண்டும் என, சனிக்கிழமை (31) ஆலோசனை வழங்கியது. இந்த நிலைமை இலங்கையில் ஏற்பட்டால், ஏற்கெனவே பொருளாதார ரீதியாக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நாடு, எவ்வாறு அதை எதிர்நோக்கும் என்பதை ஊகிக்கவும் முடியாதுள்ளது.

கடிதங்கள்

உப்பு உற்பத்தியாளர்களுக்கு தீர்வு எட்டுமா?

திருகோணமலை, கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கச்சகொடித்தீவு உப்பளத்தில், பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வதாக உப்பு செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இங்கு, 160 ஏக்கர் நிலப்பரப்பபில் உப்பு செய்கை பண்ணப்படுவதுடன் 315 நபர்கள், சொந்தமாகச் செய்கையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

நிர்ணய விலை கிடைக்கப் பெறாமை, எரிபொருள் விலையேற்றம் காரணமாக நீர் இறைக்கும் இயந்திரத்துக்கு அதிகரித்த செலவு, உப்பு மூடைகளை அடுக்கி வைப்பதற்கு நிலையான கட்டட வசதியின்மை, மிகத் தரமான உப்பை உற்பத்தி செய்வதற்கான நவீன தொழில் நுட்ப வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்காமை எனப் பல பிரச்சினைகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் முதல் நவம்பர் வரை உப்புச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

ஒரு மூடை உப்பு (50 கிலோ கிராம்) ஆரம்பத்தில் 1,000 ரூபாயாக கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், தற்போது 500 ரூபாய்க்கும் குறைவாகவே விற்பனை செய்யவேண்டி உள்ளதுடன் இவர்களது வாழ்வாதாரம் முழுமையாக உப்பு விளைச்சலிலேயே தங்கியிருக்கிறது. எனவே, உப்புச் செய்கை குறித்தான பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு விரைவில் கிடைக்குமானால், எதிர்காலத்தில் நாட்டின் அந்நியச் செலாவணி, பொருளாதார வளர்ச்சியில் பாரிய பங்களிப்பை வகிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

-ஹஸ்பர் ஏ ஹலீம்

புதுடெல்லி

ராகுலின் அழைப்பை

புறக்கணித்த பகுஜன் சமாஜ், ஆம் ஆத்மி கட்சிகள்

பாராளுமன்ற கூட்டத்தொடரில் எந்த நிலைப்பாடை எடுப்பது என்பது தொடர்பாக காங்கிரஸ் எம்.பி ராகுல் அழைப்பு விடுத்த கூட்டத்தில், முக்கிய எதிர்க்கட்சிகள் கலந்து கொண்டன. ஆனால், பகுஜன் சமாஜ், ஆம் ஆத்மி கட்சிகள் புறக்கணித்தன. இந்தக் கூட்டம் முடிந்த பின்னர் ராகுல் தலைமையில் எதிர்க்கட்சி தலைவர்கள் சைக்கிளில் பேரணியாக பாராளுமன்றம் நோக்கிச் சென்றனர்.

பாராளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில், பெகாசஸ் உளவு விவகாரம் தொடர்பாக சபையில் விவாதிக்கக்கோரி, எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டு வருகின்றன. "இந்த விவகாரம் தொடர்பாக, மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர், ஏற்கெனவே விளக்கம் அளித்துவிட்டார்" என, மத்திய அரசாங்கம் தெரிவித்தது.

இதை ஏற்காத எதிர்க்கட்சியினர் தொடர் அமளியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், சபை நடவடிக்கைகள் முற்றிலுமாக முடங்கியுள்ளன.

இந்தக் கூட்டத்தில், காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், சிவசேனா, ஆர்ஜேடி, சமாஜ்வாதி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், ஐயூஎம்எல், புரட்சிகர சோசியலிஸ்ட் கட்சி, கேரள காங்கிரஸ், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா, திரிணமல் காங்கிரஸ், லோக்தந்ரிக் ஜனதா தளம் ஆகிய கட்சிகள் கலந்து கொண்டன. ஆனால், டெல்லியில் ஆளும் கட்சியான ஆம் ஆத்மி, பகுஜன் சமாஜ் கட்சி ஆகிய கட்சிகள் கலந்து கொள்ளவில்லை.

மலையக மக்களையும் முஸ்லிம் மக்களை

மோதவிடும் சூழ்ச்சி

பா.நிரோஸ்
ddnirosh@gmail.com

மலையக மக்களையும் முஸ்லிம்களையும் மோதவிடும் சூழ்ச்சியொன்று முன்னெடுக்கப்படுவதாக குற்றஞ்சாட்டிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், அரசாங்கத்தைக் கவிழ்ப்பதோ ஆட்சிக்கு வருவதோ, அரசாங்கத்துக்கு சேறு பூசுவதோ தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நோக்கமல்ல; மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டுமென்பதே கூட்டமைப்பின் நிலைப்பாடு என்றார்.

2020ஆம் ஆண்டுக்கான மத்திய வங்கியின் அறிக்கை தொடர்பான, சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதம் நேற்று (03) நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், புளுட்டோ கடையைப் போல, நாட்டை அரசாங்கம் நிர்வகிக்கிறது. கடந்த காலங்களில் நாட்டில் அடிமட்ட மக்கள், நடுத்தர மக்கள், மேல்மட்ட மக்கள் என மூன்று வகையினர் இருந்தனர். இப்போது அரச தரப்பினர், எதிர்த்தரப்பினர், பணம் படைத்தோர், பணம் இல்லாதவர்கள் என்ற இரு வர்க்கத்தினர் மட்டுமே உள்ளனர்.

மக்களின் பிரச்சினைகள் தொடர்பில், அரச தரப்பினரும் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். அவர்கள் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியவர்கள். எவ்வாறு ஆர்ப்பாட்டம் செய்ய முடியும்? ஹிஷாலினியின் மரணத்தைப் பயன்படுத்தி, முஸ்லிம் மக்களையும் மலையக தமிழ் மக்களையும் மோத விடும் சூழ்ச்சி இன்று மேற்கொள்ளப்படுகின்றது எனவும் தெரிவித்தார்.

அவகாசம் கேட்டார் அமைச்சர்

கொரோனா வைரஸ் தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ 11 தடவைகளும் பாராளுமன்ற உறுப்பினர்கள் 15 தடவைகளும் சபையில் என்னிடம் வினவியுள்ளதாகத் தெரிவித்த சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, இவர்கள் அனைவருக்கும் நான் பதில் வழங்கியுள்ளேன் எனவும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த சஜித், கொரோனா வைரஸ் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு, காலஅவகாசம் கோருவது பல்வேறு சந்தேகங்களை எழுப்புகிறது. இந்த விடயத்தில், அரசாங்கத்திடம் புதிய தரவுகள் இல்லையா எனச் சந்தேகம் கொள்ள வேண்டியுள்ளது எனவும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொடர்பில், 24 மணித்தியாலங்களிலும் பதிலளிக்க சுகாதார அமைச்சர் தயாராக இருக்க வேண்டும் எனவும், கொரோனா வைரஸ் ஒழிப்புப் பணிகள் மீது மக்களை நம்பிக்கை கொள்ளச் செய்ய வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

புதுக்கோட்டை



சிறுமி மீது வன்கொடுமை

60 வயதான காமுகனுக்கு ஆயுள் சிறை

கீரனூர் அருகே, ஐந்துவயது மதிக்கத்தக்க சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த 60வயது முதியவருக்கு, ஆயுட்காலச் சிறைத் தண்டனை விதித்து, புதுக்கோட்டை மகிளா நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், ராசநாயக்கன்பட்டியைச் சேர்ந்த 60 வயது முதியவர், பக்கத்து வீட்டில் இருந்த ஐந்து வயது சிறுமியை, கடந்த ஆண்டு தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று, பாலியல் வன்கொடுமை செய்துள்ளார்.

சிறுமியின் தாயின் புகாரின்படி, கீரனூர் அனைத்து மகளிர் பொலிஸார் முதியவரைக் கைது செய்து வழக்குப் பதிவு செய்தனர். புதுக்கோட்டை மகிளா நீதிமன்ற நீதிபதி சத்தியா விசாரித்து, பாலியல் வன்கொடுமை செய்த வயோதிபருக்கு ஆயுட்காலச் சிறை தண்டனை விதித்து தீர்ப்பு அளித்தார்.

மேலும், 70 ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்தத் தவறினால், மேலதிகமாக ஓராண்டு சிறையும் விதித்து தீர்ப்பளித்தார். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 5 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்குமாறு அரசாங்கத்துக்கு உத்தரவிட்டார்.

தாம்பரம்

திருமணமாகி 8 மாதங்கள்

வரதட்சணைக் கொடுமை உயிரை மாய்த்த பெண்

தாம்பரம் அருகே திருமணமான 8 மாதங்களில் இளம் பெண் தனது உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் அப்பிரதேசத்தல் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை, பனையூரைச் சேர்ந்தவருக்கும் சேலையூர் பெண்ணுக்கும் திருமணம் நடந்துள்ளது. இதேவேளை, இவர்களுக்குத் திருமணமாகி 8 மாதங்களாகின்றன. இந்நிலையில், வரதட்சணை கேட்டு மனைவியை கணவர் கொடுமைப்படுத்தி வந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இதனால், கணவருடன் கோபித்துக் கொண்டு, சேலையூரில் உள்ள தனது பெற்றோர் வீட்டுக்கு மனைவி சென்றுள்ளார்.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை (01) இரவு கணவன் தொலைபேசி மூலம் மனைவியைத் தொடர்பு கொண்டு, வாக்குவாதத்தில் ஈடுபட்டாராம். இதனால் மன உளைச்சலில் இருந்த மனைவி, தனது அறையில் உயிரை மாய்த்துக்கொண்டார். சேலையூர் பொலிஸார் அவரது சடலத்தை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். வரதட்சணைக் கொடுமையால் தனது மகள் உயிரை மாய்த்துக்கொண்டதாக தந்தை பொலிஸில் புகார் செய்தார்.

புதுடெல்லி

பத்திரிகையாளர் கொடூர கொலை

இந்திய புகைப்பட பத்திரிகையாளர் டேனிஷ் சித்திக்கை, தலிபான் பயங்கரவாதிகள் மிகக் கொடூரமாக கொலை செய்துள்ளனர் என பிரேத பரிசோதனை அறிக்கையில் அம்பலமாகியுள்ளது.

ஆப்கானிஸ்தானின் காந்தஹார் நகரில், அந்த நாட்டு இராணுவத்தினருக்கும், தலிபான் பயங்கரவாதிகளுக்கும் நீண்ட காலமாக மோதல் நடந்து வருகிறது. இது குறித்து செய்தி மற்றும் புகைப்படங்களை சேகரிக்க ஆப்கன் தேசிய பாதுகாப்பு படையினருடன், இந்தியாவைச் சேர்ந்த டேனிஷ் சித்திக் சென்றார். இவர் புகைப்பட செய்தியாளர்களுக்கு வழங்கப்படும், மிக உயர்ந்த, 'புலிட்சர்' விருது பெற்றவர்.

இந்நிலையில் கடந்த மாதம் ஸ்பின் போல்டக் பகுதிக்கு சித்திக் சென்றார். அப்போது தலிபான்கள் நடத்திய தாக்குதலில் சித்திக் காயம் அடைந்தார். சிகிச்சைக்காக அருகில் இருந்த மசூதியில் அவர் அனுமதிக்கப்பட்டார். அங்கு வந்த தலிபான் பயங்கரவாதிகள், பத்திரிகையாளர் என தெரிந்தே சித்திக்கை கொன்றனர்.

வருமானத்தை விஞ்சியது கடன்

அரசாங்கத்தின் நாளொன்றுக்கான வருமானம் 4 பில்லியன் ரூபாயாக (400 கோடி ரூபாய்) இருக்கிறபோது, நாளொன்றுக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை 5.65 பில்லியன் ரூபாயாகும் (565 கோடி ரூபாய்) எனத் தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க, வருமானம் இன்னும் குறைவடையும் என எச்சரித்தார்.

2020ஆம் ஆண்டுக்கான மத்திய வங்கியின் அறிக்கை தொடர்பான, சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தை நேற்று (03) ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், மத்திய வங்கியின் அறிக்கையில் அரசாங்கம் பல்வேறு விடயங்களை மறைத்துள்ளது. அரசாங்கத்தின் நாளொன்றுக்கான வருமானத்தை விடவும் கடன் விஞ்சிவிட்டது.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் வழங்கிய வரி சலுகைகளால் எந்தவிதமானப் பிரயோசனங்களும் இல்லை. கடந்த ஒருவருடத்தில் தேயிலை உற்பத்தி 14 இலட்சம் கிலோ கிராமாக குறைவடைந்துள்ளது. இதற்கு உர இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட தடையே பிரதான காரணமாகும்.

தேயிலை உற்பத்தியால் நாட்டுக்கு 1.3 பில்லியன் டொலர்கள் வருமானம் கிடைக்கிறது. இந்த வருமானம் 650 மில்லியன் டொலரால் குறைவடையப் போகிறது என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர் என்றும் இதன்போது தெரிவித்தார்.

ரணிலின் யோசனைக்கு அரசாங்கம் பச்சைக்கொடி

முன்னாள் பிரதமரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்கவால் சபையில் நேற்று (03) முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அரசாங்கம் பச்சைக்கொடி காட்டியுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் நேற்று (03) கூடிய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி உரையாற்றிய ரணில், "அமெரிக்காவின் சுகாதார அமைச்சர் அல்லது பிரதமர், அந்நாட்டுக் கொரோனா வைரஸ் நிலைமைகள் தொடர்பில் ஒவ்வொரு வாரமும் பாராளுமன்றத்தில் உரையாற்றக்கூடிய புதிய முறை உருவாக்கப்பட்டுள்ளது" என்றார்.

கொரோனா வைரஸ் நிலைமைகள் தொடர்பில், இலங்கையில் பலரும் பல்வேறு கருத்துகளைக் கூறிவருகிறார்கள். எனவே, செவ்வாய்க் கிழமைகளில் அமைச்சரவைச் சந்திப்பு இருப்பதால், அந்நாள்களில், சுகாதார அமைச்சர் கொரோனா வைரஸ் தொடர்பான நாட்டு நிலைமைகளை பாராளுமன்றத்துக்கு அறிவிப்பாரா? எனவும் ரணில் இதன்போது வினவினார்.

இதுவொரு நல்ல யோசனை என இதன்போது பதிலளித்த சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, கேள்வி- பதில் அல்லாது, ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் நாட்டின் கொரோனா வைரஸ் தொடர்பான நிலைமைகளை பாராளுமன்றத்தில் அறிக்கைப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

புதுடெல்லி

நரேந்திர மோடி பா.ஜ.க எம்.பிக்கள் சந்திப்பு

அசாம் - மிசோரம் இடையிலான எல்லைப் பிரச்சினை தொடர்பாக, வட கிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த பாரதிய ஜனதா கட்சி எம்.பிக்கள் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேசியுள்ளனர்.

மிசோரமில் சோரம் தங்கா தலைமையிலான மிசோ தேசிய முன்னணி ஆட்சி நடக்கிறது. இந்த இரு மாநிலங்களுக்கு இடையே எல்லையைப் பகிர்ந்து கொள்வதில் பிரச்சினை எழுந்தது. அசாமுக்கு சொந்தமான நிலப்பரப்பை, மிசோரம் அத்துமீறி ஆக்கிரமித்து இருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

இரு மாநில பொலிஸார் இடையே எல்லையில் மோதல் வெடித்தது. இதில் அசாமை சேர்ந்த ஐந்து பொலிஸார் உட்பட ஆறு பேர் பலியாகினர். இந்தச் சம்பவம், பிரச்சினையைத் தீவிரமாக்கியது. இருமாநில தலைமை செயலாளர்கள், டி.ஜி.பிக்களை அழைத்து, மத்திய உள்துறை செயலாளர் சமீபத்தில் பேச்சு நடத்தினார். இந்நிலையில் வட கிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த பா.ஜ.க எம்.பிக்கள் 16 பேர், பிரதமர் நரேந்திர மோடியை டெல்லியில் சந்தித்து பேசினர்.

சென்னை

மூன்றாவது வழக்கு:

சிவசங்கர் பாபா புழல் சிறையில் அடைப்பு

சிவசங்கர் பாபா, மாணவியருக்கு பாலியல் தொல்லை கொடுத்த புகாரில் கைதான இவருக்கு மூன்றாவதாகவும் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பாக, சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சிவசங்கர் பாபாவை, செங்கல்பட்டில் உள்ள, போக்சோ நீதிமன்றத்தில் நேற்று (03) ஆஜர்படுத்தினர். அவரை நீதிபதி தமிழரசி, எதிர்வரும், 16ஆம் திகதி வரை நீதிமன்ற காவல் சிறையில் அடைக்க உத்தரவிட்டுள்ளார். அத்துடன் சிவசங்கர் பாபா மீது, சி.பி.சி.ஐ.டி, பொலிஸார், 'போக்சோ' சட்டத்தில், இரண்டு வழக்குகள் பதிந்து கைது செய்துள்ளமை தெரிந்ததே.

நிர்க்கதியாகியுள்ள இலங்கையர்களை

அழைத்து வருவோம்

வெளிநாடுகளில் நிர்க்கதியாகியுள்ள இலங்கையர்களை, புதிய சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக, நாட்டுக்கு அழைத்துவரும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் எம்.பி எழுப்பியிருந்த வாய்மூல விடைக்கான வினாவுக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் நேற்று (03) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், வெளிவிவகார அமைச்சின் கீழ், பிரத்தியேகமாக இயங்கும் இணையத்தில் இலங்கைக்கு வருகை தருவதற்காக விண்ணப்பித்துள்ளர்வர்களின் விவரங்கள் உள்ளன. வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருபவர்களுக்கு புதிய வழிகாட்டல்களைக் கடந்த ஜூலை 15ஆம் திகதி சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் நிலையங்களில் காணப்படும் வசதிகளுக்கு ஏற்பவே, வெளிநாடுகளில் இருந்து இலங்கையர்கள் அழைத்து வரப்படுகிறார்கள். சுகாதார அமைச்சு, கொவிட் -19 ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி, வெளிவிவகார அமைச்சு ஆகியன இணைந்து இப்பணிகளை முன்னெடுத்து வருகின்றன என்றார்.

சீனா

மீண்டும் தொற்று அபாயம்;

வுஹானில் சோதனை தீவிரம்

சீன நகரமான வுஹானிலுள்ள அதிகாரிகள், அந்நகரம் முழுவதும் முழுமையான சோதனை நடவடிக்கையைத் தொடங்கியுள்ளனர்.

இதன்படி, அங்குள்ள பொதுமக்கள் அனைவரும் கொவிட் 19 பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

வுஹானில் மீண்டும் கொரோனாத் தொற்றாளர் அடையாளங் காணப்பட்டமையை அடுத்தே, இவ்வாறு சோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

ஓராண்டுக்கும் மேலாக வுஹானில் உள்ளூரில் பரவிய தொற்றாளர் இல்லாத நிலையில், தற்போது முதலில் ஏழு தொற்றாளர்களை வுஹான் பதிவு செய்துள்ளது.

கொரோனா முதலில் வுஹானிலேயே 2019ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

துருக்கியில் காட்டுத் தீ

துருக்கியின் பொட்ரூமுக்கு அருகிலுள்ள மஸி பிராந்தியத்தில் காட்டுத் தீயொன்றை அணைக்க தீயணைப்புப் படைவீரர் போராடி வருகின்றனர்.

டோக்கியோ 2020:

வார்ஹொம் உலக சாதனை

ஜப்பானில் நடைபெற்றுவரும் டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளில், ஆண்களுக்கான 400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் நோர்வேயின் கர்ஸ்டன் வார்ஹொம் உலக சாதனை படைத்துள்ளார்.

போட்டித் தூரத்தை 45.94 செக்கன்களில் வார்ஹொம் கடந்து, கடந்த மாதம் தான் ஏற்படுத்திய 46.70 செக்கன்கள் என்ற உலக சாதனைப் பெறுதியை முறியடித்திருந்தார்.

இந்நிலையில், இரண்டாமிடத்தைப் பெற்ற ஐ. அமெரிக்காவின் ராஜ் பெஞ்சமின்னும் 46.17 செக்கன்களில் போட்டித் தூரத்தைக் கடந்து, முன்னைய வார்ஹொம்மின் உலக சாதனைப் பெறுதியை விட குறைந்த நேரத்தில் போட்டித் தூரத்தைக் கடந்திருந்தார்.

அந்தவகையில், பதக்கப் பட்டியலில் இலங்கை நேரப்படி நேற்றுப் பிற்பகல் 3.30 மணி வரையில், 32 தங்கம், 20 வெள்ளி, 16 வெண்கலப் பதக்கங்களுடன் முதலாமிடத்தில் சீனா காணப்படுகின்றது. 22 தங்கம், 27 வெள்ளி, 19 வெண்கலப் பதக்கங்களுடன் இரண்டாமிடத்தில் ஐ. அமெரிக்காவும், 18 தங்கம், ஆறு வெள்ளி, 10 வெண்கலப் பதக்கங்களுடன் மூன்றாமிடத்தில் ஜப்பானும் காணப்படுகின்றது.

டோக்கியோ 2020: கால்பந்தாட்டத்தில்

இறுதிப் போட்டிக்கு முன்னேறாத அமெரிக்கா

ஜப்பானில் நடைபெற்றுவரும் டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளில், பெண்களுக்கான இறுதிப் போட்டிக்கு ஐக்கிய அமெரிக்கா முன்னேறியிருக்கவில்லை.

கனடாவுடனான அரையிறுதிப் போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் ஐ. அமெரிக்கா தோற்றிருந்தது. கனடா சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜெஸி பிளெமிங்க் பெற்றிருந்தார்.

இதேவேளை, மற்றைய அரையிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவை 1-0 என்ற கோல் கணக்கில் வென்ற சுவீடன் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தது. சுவீடன் சார்பாகப் பெறப்பட்ட கோலை பிறிடோலினா றொல்ஃபோ பெற்றிருந்தார்.

டோக்கியோ 2020: 5,000 மீற்றரில்

தங்கம் வென்ற சி:.பான் ஹஸன்

ஜப்பானில் நடைபெற்று வரும் டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளில், பெண்களுக்கான 5,000 மீற்றர் ஓட்டத்தில் நெதர்லாந்தின் சிஃபான் ஹஸன் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

இந்நிலையில், கோப்பியில்லாமல் தான் ஒலிம்பிக் சம்பியன் ஒருவர் ஆகியிருக்க முடியாது என ஹஸன் தெரிவித்துள்ளார்.

ஐ. அமெரிக்கா



கருந்துளைக்கு பின்னால்

முதற்தடவையாக ஒளி கண்டுபிடிப்பு

முதற் தடவையாக கருந்துளை (Black Hole) ஒன்றின் பின்னால் ஒளியை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளதுடன், அல்பேர்ட் ஐன்ஸ்டீனின் பொதுச் சார்ப்பியலில் எதிர்வுகூறலொன்று முழுமையாகியுள்ளது.

பூமியிலிருந்து 800 மில்லியன் ஒளியாண்டுகள் தூரத்திலுள்ள கலக்ஸி ஒன்றின் மத்தியில் அமைந்துள்ள கருந்துளையொன்றால் வெளியிடப்படும் எக்ஸ் கதிர்களை, ஐக்கிய அமெரிக்காவின் ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தின் விண்வெளி பௌதிகவியல் விஞ்ஞானியான டான் வில்கின்ஸும் அவரது குழாமுமே அவதானித்துள்ளனர்.

ஈரான்

‘தடைகளை நீக்குவேன்’

ஐக்கிய அமெரிக்காவால் விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்கத் தான் நடவடிக்கை எடுப்பேன் என ஈரானின் ஜனாதிபதியாக வரவுள்ள எப்ராஹிம் றைசி நேற்றுத் தெரிவித்துள்ளார்.

நாளை ஜனாதிபதியாக றைசி பதவியேற்கவுள்ளதுடன், நம்பிக்கை வாக்கெடுப்பொன்றுக்காக பாராளுமன்றத்துக்கு தனது அமைச்சரவையை சமர்ப்பிப்பதற்கு ஒரு வாரத்தைக் கொண்டிருப்பார்.

சூடான்

ஆற்றில் மிதந்த 30 சடலங்கள்

எதியோப்பியாவின் வட பிராந்தியமான திக்ரேக்கும், சூடானுக்குமிடையிலுள்ள ஆற்றில் குறைந்தது 30 சடலங்கள் மிதந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சூடானில் ஆறு நாள்களில் 10 சடலங்கள் புதக்கப்பட்டதாகவும், மேலும் 28 மீட்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. சடலங்களின் நெஞ்சில், அடிவயிற்றில், கால்களில் சுடப்பட்டுள்ளதுடன், கால்கள் கட்டப்பட்டுள்ளன.

ஐ. அமெரிக்கா

முகக்கவசம்/ தடுப்பூசி கட்டாயமானால்

‘ஐந்தில் ஒரு பணியாளர் அவுட்’

தடுப்பூசி அல்லது முகக்கவசம் கட்டாயமாக்கப்பட்டால் தாங்கள் வேலைகளை விட்டு விலகுவோம் என புதிய கருத்துக் கணிப்பு ஒன்றில் ஐந்திலொரு பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பல்தேசிய நிறுவனங்கள் தங்களது பணியாளர்களுக்கு தடுப்பூசிகளைக் கட்டாயமாக்கின்ற நிலையிலேயே இக்கருத்துக்கணிப்பு வெளியாகியுள்ளது.

மோர்னிங் கொன்ஸல்டால் குறித்த கருத்துக்கணிப்பு நடாத்தப்பட்டிருந்தது.

கொரோனாவுக்கு எதிராக தடுப்புமருந்து ஏற்ற வேண்டும் என ஐக்கிய அமெரிக்கப் பணியாளர்களுக்கு கூகுள், பேஸ்புக், வொஷிங்டன் போஸ்ட் போன்ற நிறுவனங்கள் கடந்த வாரம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

டோக்கியோ 2020: மல்யுத்தத்தில்

தொடர்ச்சியாக நான்காவது தங்கம்

ஜப்பானில் நடைபெற்றுவரும் டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளின்போது தொடர்ச்சியான தனது நான்காவது தங்கப் பதக்கத்தை கியூபாவின் மிஜைன் லொபெஸ் வென்றுள்ளார்.

130 கிலோ கிராம் எடை கிரேக்க-றோமன் மல்யுதத்தின் இறுதிப் போட்டியில் ஜோர்ஜியாவின் லகோபி கஜையாவை 5-0 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றே லொபேஸ் தங்கப் பதக்கத்தை வென்றிருந்தார்.

அந்தவகையில் ஒரே தனிநபர் போட்டியில் நான்கு தங்கப் பதக்கங்களை வென்ற போல் எல்வ்ஸேராம் (படகோட்டம்), அல் ஒயெர்டர் (தட்டெறிதல்), கார்ல் லூயிஸ் (நீளம் பாய்தல்), மைக்கல் பெல்ப்ஸ் (200 மீற்றர் மெட்லி) ஆகியோருடன் லொபேஸ் இணைந்துள்ளார்.



இந்தியா எதிர் இங்கிலாந்து:

டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பம்

இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கு இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது நொட்டிங்ஹாமில் இலங்கை நேரப்படி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள முதலாவது டெஸ்டுடன் ஆரம்பிக்கின்றது.

இங்கிலாந்தில் வைத்து இங்கிலாந்தை வீழ்த்துவதற்கான சிறந்த சந்தர்ப்பமாக இத்தொடர் காணப்படுகின்றது.

மாயங்க் அகர்வாலுக்கு தலையில் பந்து தாக்கிய நிலையில், அவருக்குப் பதிலாக ஆரம்பத் துடுப்பாட்டவீரராக லோகேஷ் ராகுல் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தவிர, அஜின்கியா ரஹானேயும் முழு உடற்றகுதியை அடைந்த நிலையில் அவரும் களமிறங்குவதோடு, செட்டேஸ்வர் புஜாராவுக்கு ஓட்டங்களைப் பெறுவதற்கான இறுதி வாய்ப்பாக இது கருதப்படுகிறது.

இதுதவிர, இரவிச்சந்திரன் அஷ்வின் மாத்திரமே சுழற்பந்துவீச்சாளராக களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுவதோடு, மொஹமட் சிராஜ்ஜும் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 04 ஒகஸ்ட் 2021, இல. 8, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.